**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.2/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாராயிணா | மதம் | : இந்து |
| த/பெ | : சீனிவாசலு நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : K.G. கண்டிகை |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**04.02.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 16.01.2019ம் தேதியிட்டு பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த கடனுறுதிச் சீட்டு அசல் மற்றும் அதன் தமிழ்மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 17.11.2021ம் தேதியிட்ட நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிரதிவாதி வழக்கறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)